சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:12/2016

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராதாகிருஷ்ணன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

08.01.2024

நான் இந்த வழக்கின் 2ம் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 29.07.1956 தேதியிட்ட தலமனை அம்பலம் உறவின்முறை பிரதிநிதிகளுக்கு வீரப்பன் செட்டியார் எழுதிக்கொடுத்த தானபத்திரம் சார்பதிவக நகல் வா.சா.ஆ.1 ஆகும். 13.01.2011 தேதியிட்ட விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட SLR சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகும். 13.06.2023 தேதியிட்ட டவுன் ரீசர்வே ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3ஆகும். 21.05.1920 தேதியிட்ட சங்கரலிங்கம் வகையறா சுந்தரவிநாயகர் கோவில் மடத்திற்கு எழுதி வைத்த தானபத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4ஆகும். 07.09.1905 தேதியிட்ட சங்கரலிங்கம் வகையறா ராமலிங்க மூப்பன் வகையறாவிட்மிருநது கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும். தோராய சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.